பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 17 ஆடி 28 ஷஃபா 26 இதழ்: '82

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-8-77

யாழ். றோட்டறி
காணிவல்
இலவசக் காட்சிகள்
சென். பற்றிக்ஸ் கல்லூரி
மைதானம்
13-8-77
வரை நீடிக்கப்பட்டுள்ளது
● திகிலூட்டும் நெருப்பில் பெண்ணின் பயங்கர பாய்ச்சல், ● 'பப்பட்' காட்சி ● கரகாட்டம் ● மாயா ஜால வித்தைகள் ● பொப் நிகழ்ச்சிகள்.
தினமும் நடைபெறும். 6764

# கட்டுநாயகாவில்

## கடத்தல் பொருட்கள்

### தடைப்பிராந்தியத்தில் கார்கள் நுழைந்தது எப்படி?

கொழும்பு, வியாழன்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தில்நடைபெற விருந்த மிகப்பெரிய கடத்தல் முயற்சி ஒன்று முறியடிக்கப் பட்டது.

80,000 ரூபா பெறுமதி மிக்க இந்த சட்டவிரோத கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட விருந்ததாகக் கூறப்படும் இரு கார்களும் தடுத்து வைக்கப் பட்டுள்ளன.

இச்சம்பவம்பற்றி பொலிசார் தெரிவித்துள்ளதாவது: சம்பவதினத்தன்று பிற்பகல் தடைசெய்யப்பட்ட விமான நிலயப் பிராந்தியத்தில் இரு கார்களில் சூட்கேஸ்கள் ஏற்றப்படுவதாக பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு பிரேமதிலகாவுக்கு தகவல்கிடைத்ததாம்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த அவர் குறிப்பிட்ட கார்களில் ஏற்றப்பட்டிருந்த பல சூட்கேசுகளைச் சோதனையிட்டபோது அவற்றுள் விலையுயர்ந்த சாறிகள், கார் உதிரிப்பாகங்கள், வானொலிகள், மின்சார உபகரணங்கள், 400 யு. எஸ். டாலர்கள் என்பன கண்டுபிடிக்கப் பட்டனவாம்.

இச்சூட்கேசுகள் சுங்கப் பரிசோதனைக்குக் காண்பிக்கப் படாது மறைக்கப்பட்டது எப்படி, இக்கார்கள் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் புகுந்தது எப்படியென்பன குறித்துப் பொலிசாரும் சுங்கப் பகுதியினரும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

80,000 ரூபா பெறுமதியான இப்பொருட்கள் விசாரணையின் பின் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கார்களும் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (உ)

# தமிழுக்கும் அரசகரும அந்தஸ்து வேண்டும்!

## ஜனாதிபதிஉரைமீது இ தொ.காங்கிரஸ் கொண்டுவரும் திருத்தப்பிரேரணை

### "தோட்ட வன்முறை பற்றியும் குறிப்பிடப்படவில்லை"

கொழும்பு, வியாழன்

**இந்தநாட்டின் அரசகருமமொழியாக சிங்களம் உள்ளது. இதேபோல, தமிழ் மொழிக்கும் அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். ஈழநாட்டின் ஒரு அரசகரும மொழியாகத் தமிழ்மொழி ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.**

ஜனாதிபதி உரைக்கு, மேற்படிக்கோரும் திருத்தப் பிரேரணையொன்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் சார்பு) சமர்ப்பிக்க விருக்கிறது.

தேசிய அரசுப்பேரவை கடந்த 4-ம் திகதி முதற்தடவையாகக் கூடியபோது, ஜனாதிபதி அரசின் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டதும்,பின்னர் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தேசிய அரசுப் பேரவை இம் மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டதும் தெரிந்ததே. மீண்டும் பேரவை கூடும்போது தமிழர் விடுதலைக் கூட்டணியும், அதன் ஓர் அங்கமான இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸும் பல திருத்தங்களைச் சமர்ப்பிக்கும். இ தொ. காங்கிரஸ் கொண்டுவரும் பதினைந்து திருத்தங்களில் சில வருமாறு:

"தமிழ்மொழிக்கு அரசகரும மொழி அந்தஸ்து வழங்கப் பட வேண்டும்.

"அரசாங்கத்துடனும், அரசு சார்ந்த நிறுவனங்களுடனும் தமிழ் மக்கள் தமிழில் தொடர்பு கொள்ள வகைசெய்ய வேண்டும்.

'ஒரு இணைப்பு மொழியாக தமிழமொழியை உபயோகித்தல்,

[6 ம் பக்கம் பார்க்க]

# பளை சம்பவம்: நால்வர் கைது!

யாழ்ப்பாணம், வெள்ளி

பளை கொள்ளை, வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நால்வரும் யக்கச்சியில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்,

சந்தேக நபர்களான றெக்ஸ் பொன்னம்பலம், எஸ். பழனியாண்டி, சி. சுப்பிரமணியம், கே. ரத்தினசபாபதி ஆகியோர் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை இம்மாதம் 14 ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக மற்றும் 4 சந்தேக நபர்களைப் பொலிசார் தேடிவருகின்றனர். பொலிசார் தொடர்ந்து காடுகளில் தேடுதல் நடத்திவருகின்றனர்.

பளை சம்பவம்பற்றிக் கூறப் படுவதாவது:-

பளை பொலிஸ் பகுதியில் உள்ள தருமக்கேணியில் வி. கந்தசாமி என்பவரது வீட்டில் இரவு வேளை நிகழ்ந்த கொள்ளையில் துப்பாக்கி உட்பட 13,000 ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் பறிபோயினவாம். சம்பவ தினம் இரவு

(6-ம் பக்கம் பார்க்க)

தீர்வையற்ற வர்த்தகபிராந்திய அபிவிருத்திக்கு

# அதிக கப்பல்கள் வாங்கப்படும்

### ராஜன் கதிர்காமர் தகவல்

கொழும்பு, வியா.

நாட்டில் அமைய இருக்கும் தீர்வையற்ற வர்த்தக பிராந்திய அபிவிருத்திக்காக கப்பல் கூட்டுத்தாபனம் மேலதிக கப்பல்களைக் கொள்வனவு செய்ய உள்ளது.

இத்தகவலை கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் றியல் அட்மிரல் ராஜன்கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

தீர்வையற்ற வர்த்தகப் பிராந்தியத்திற்கு பல்வேறு வகையில் உதவக்கூடியவிதத்தில் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் உத்தேச பிராந்தியத்தில் உற்பத்திக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் அப்பிராந்தியத்தின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குமே அதிக கப்பல்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ளது என்றும் ராஜன் கதிர்காமர் கூறினார். (இ)

# துணிகரக் கொள்ளை முயற்சி தோல்வி!

## மானிப்பாயில் சம்பவம்

ஆனைக்கோட்டை, வெள்ளி

கார் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அந்தக்காரின் துணைகொண்டே கொள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி கடைசி நேரத்தில் தோல்வியில் முடிந்தது!

இச்சம்பவம் பற்றிக் கூறப் படுவதாவது:

மானிப்பாய் தனியார் ஆஸ்பத்திரிக்குஅருகாமையில்நின்ற வாடகைக்கார் ஒன்றை சைக்கிளில் வந்த இரு நபர்கள் அராலிக்குப் போகவேண்டுமென்று கூறி 18 ரூபா வாடகையும் பேசி அமர்த்திச் சென்றனராம். இக்கார் பின்னர் கல்லுண்டாய்வெளியைக்கடந்ததும், மேலும் மூவர் காரில் ஏறிக்கொண்டு கைத்துப்பாக்கியைக் காட்டிகார்ச்சாரதியை பயமுறுத்தி, சாரதியின் கண்ணையும் வாயையும் கட்டி பின் ஆசனத்தில் அவரை அமர்த்திவிட்டு, காரை மேற்படி நபர்கள் கோப்பாய்க்கு எடுத்துச் சென்றனராம். இக்கொள்ளைக் கோஷ்டி நீர்வேலி ப.நோ.கூ. சங்கத்திலிருந்து கோப்பாய் வங்கிக்கு கொண்டுவரும் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு காத்து நின்றது என்று விசாரணையின்போது தெரிய வந்தது ஆனால் இவர்கள் முயற்சி தோல்வியடையவே காரையும் சாரதியையும் சுன்னாகம் பொலிஸ்பகுதியைச் சேர்ந்த சிறுப்பிட்டியில் கைவிட்டுச் சென்றனராம்.

இதுபற்றி மேற்படி கார்ச் சாரதியான செல்லர் சற்குணராஜா ஆனைக்கோட்டைப் பொலிசாருக்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரான, மாணிக்கவாசகர் ஆகியோர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணையில் இறங்கியுள்ளது. இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (கு)

# எம். பி.க்கள் சிபார்சில் விவசாயக் குழுக்கள்

கொழும்பு வியா

அண்மையில் கலைக்கப்பட்ட உற்பத்திக் குழு, விவசாயக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்கள் இப்போது எம்.பிக்களின் சிபார்சுக்கமைய நியமிக்கப்படுவர்.

நேற்றைய மந்திரி சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி குழுக்களின் உறுப்பினர்களை விவசாயிகளே தெரிவு செய்ய வேண்டுமென்றும் தற்காலிக ஏற்பாடாக இப்போது எம். பிக்களின் சிபார்சுக்கமைய இவர்கள் தெரிவுசெய்யப்படுவர்என்றும் விவசாயக் காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தெரிவித்தார். (இ)

### மணிவாக்கு

உழைக்காமல் உண்டுகொண்டிருப்பவன் பிறரிடமிருந்து களவாடப்பட்ட உணவையே உண்கிறான்.
—மகாத்மா காந்தி.

ஈழநாடு
THE EELANAADU

# விலைவாசிக் குறைப்பு

நாடு முழுவதும் விலைவாசிகள் ஓரளவு குறைந்திருப்பதாகப் பல பகுதிகளிலுமிருந்து கிடைத்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் விலைவாசிகளைக் குறைப்பதற்கு அரசு இன்னமும் தீர்க்கமான முடிவு எதையும் அறிவிக்கவில்லை.

விலைவாசிகளைக் குறைப்பதற்காக, அரசு தீவிரமான முயற்சியில் இறங்கியிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

விலைகள் குறைந்துவிடும் என்ற அச்சத்தில் பதுக்கி வைத்திருந்த பொருட்களை எல்லாம் பதுக்கல்காரர்கள் வெளியில் கொண்டுவந்து விற்க ஆரம்பித்திருக்கிறார்கள் இதனால் விலைகளும் ஓரளவு குறைந்துள்ளன; தட்டுப்பாடும் சற்று நீங்கியுள்ளது

இதேசமயம் நகரங்களுக்குத் தூரத்திலுள்ள பகுதிகளில் முக்கியமான சாமான்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் கிடைக்கின்றன.

விலைகள் குறைக்கப்பட்டால் நஷ்டமடைய நேரும் என்ற பயத்தில் தூர இடங்களிலுள்ள கடைக்காரர்கள் நகரப் பகுதிகளிலிருந்து முக்கியமான பொருட்களைப் பெருமளவில் வாங்கிச் செல்லாது விடுவதே இதற்குக் காரணம். நகரங்களிலும் இப்பொருட்களுக்கு இன்னும் சில தினங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடலாம்.

ஒரு காலத்தில் இரவிரவாகப் பொருட்களின் விலைகள் 'ரொக்கட்' வேகத்தில் ஏறிக்கொண்டிருந்ததை மக்கள் இன்னும் மறக்கவில்லை.

நள்ளிரவுக் 'கஸட்' அறிவித்தல்கள் வந்த வேகத்தைக் கண்டு மக்கள் பெரும் அச்சம் கொள்ள நேர்ந்தது.

உள்ளூரில் மக்களுக்குத் தேவையான பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடும், விலையேற்றமும் ஏற்பட்டிருந்த அந்தவேளையில், அப்பொருட்களை இங்கேயே தயாரித்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்து, அந்நியச் செலாவணியைச்சம்பாதிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் எந்த வகையிலும் மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை.

முதலில் நாட்டு மக்களுக்குத் தேவையான பொருட்கள் தாராளமாகக் கிடைக்க வழிசெய்யாதுவிடின் வேறு எந்தக் கவர்ச்சியான சாதனைகளாலும் அவர்களைத் திருப்திப்படுத்திவிட முடியாது.

கடந்த பொதுத் தேர்தல் இதனை நன்கு உணர்த்தியுள்ளது.

இப்போதைய நிலையில் விலைவாசிகளை நிரந்தரமாகக் கட்டுப்படுத்தவும், அவசியமான பொருட்கள் தாராளமாகக் கிடைக்கவும் அரசு வழிசெய்யவேண்டும். இதனை அவசரப்பட்டுச் செய்ய இயலாதுதான். ஏற்கனவே உள்ள நிலைமைகளையும், இனி எடுக்கும் நடவடிக்கைகளால் விளையும் பாதிப்புக்களையும், நாட்டின் நிதி நிலைமையையும் முதலில் ஆராய்ந்து அறிந்துகொண்டபின்பே ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் எடுக்க முடியும். இந்தப் பணியிலேயே அரசு இப்பொழுது மூழ்கியிருக்கிறது என்பது கண்கூடு.

இன்னும் இரண்டொரு நாட்களில் நிவாரணம் கிடைக்கலாம். அது நாட்டு மக்களை நிச்சயமாகத் திருப்திப்படுத்துமென்றே எதிர்பார்க்கலாம்.

முக்கியமாக, அத்தியாவசிய உணவுகளும், இதர பாவனைப் பொருட்களும் விலை குறைக்கப்படவேண்டும். அவை தாராளமாகவும் கிடைக்கவேண்டும். இந்த நிலைமை நிரந்தரமாக நிலைக்கவும்வேண்டும்.

இதையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## லட்சார்ச்சனை நேற்று ஆரம்பம்

மட்டுவில், வியாசாவகச்சேரி ஸ்ரீசந்திரசேகர வாரிவனநாதசிவன் ஆலயத்தின் வருடாந்த இலட்சார்ச்சனை விழா நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆலய மகோற்சவ குரு பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் மேற்பார்வையில், புங்குடுதீவு சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். இந்த இலட்சார்ச்சனை விழா தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். இப்பத்துத் தினங்களிலும் இரவு உபந்நியாசங்கள் நடைபெறும்.

இன்றிரவு துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'நமச்சிவாயவாழ்க' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார். (அ)

## பறவைக் காவடி

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பளை வாசியும், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியருமான திரு. ராஜகோபால் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மகோற்சவத்தில் பறவைக்காவடி எடுத்துத் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றினார். (௨)

## இவர்களே வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் 'நுகர்ச்சியாளர் பிரதிநிதிகளாக அண்மையில் நியமிக்கப்பட்ட 31 பேரே வேலை நீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பூராவும் கூட்டுறவு இலாகாவால் நுகர்ச்சியாளர் பிரதிநிதிகளாகநியமிக்கப்பட்ட ஊழியர்கள் கூட்டுறவு இலாகாவினால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (இ)

## மாணவர் மன்றம்

மட்டுவில், வியாழன்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் உயர்மாணவர்களுக்கான உயர் மாணவர் மன்றம் ஒன்று கல்லூரி அதிபர் திரு க.பாலச்சந்திரன் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த மாணவர் உயர் மன்றத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. பி. பராபரன், உபதலைவர்கள் திரு. ஆறுமுகலிங்கம் செல்வி சிவமலர், செயலாளர் திரு. சங்கநிதி உப செயலாளர் திரு திருநாவுக்கரசு, பொருளாளர் திரு. திருமாறன், பத்திராதிபர் செல்வி வி இந்திராணி மேலும் திரு. ஜெயபாலன், திரு. பி மகேந்திரன், செல்வி கமலாதேவி, செல்வி. சந்திரேஸ்வரி ஆகியோர் வகுப்பு பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். (உ)

# எதிர்க்கட்சித்தலைவர் அமிருடன் ஒருபிரத்தியேகப் பேட்டி:



எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் 'ஈழநாடு'வுக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியின் முதல் பகுதி நேற்றுமுன் தினம்வெளிவந்தது. இரண்டாவது பகுதி இன்று வருகிறது. மூன்றுவது கடைசிப் பகுதி, நாளை வெளிவரும்.

**கேள்வி:** எதிர்க்கட்சித் தலைவராக நீங்கள் பதவியேற்று இருக்கின்றீர்கள் அதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவராகவும் இருக்கின்றீர்கள். இந்தநிலையில், எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து கொண்டு, எவ்விதமாக கூட்டணியின் இலட்சியத்தை அடைய முயற்சிப்பீர்கள்?

### மக்களின் ஆணை

**அமிர்:** மக்கள் எமக்கு ஓர் ஆணையை அளித்திருக்கின்றார்கள். அந்த ஆணைதான் எமக்கு முக்கியம். அந்த ஆணையின் பேரில்தான் நாம் பேரவைக்கு வந்தோம். ஆனால் சந்தர்ப்ப வசமாக எமக்கு இப்படிபொரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. எனவே கிடைத்த சந்தர்ப்பத்தை எம்முடைய நோக்கத்துக்காக பயன்படுத்துவோமே தவிர மக்களின் கருத்தைச் சிதறச் செய்யும் நடவடிக்கைளில் நாம் ஈடுபடமாட்டோம்.

அரசின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நியாயம் கூறிக்கொண்டிருப்பதற்கு இது நேரமல்ல. எனினும் அரசின் தவறை நாங்கள் சுட்டிக்காட்டுவோம்; நீதியை உணர்த்துவோம்.

கடமையாகும். அட்டடி ஒரு கட்டம் உருவாகும்போது, அதுபற்றி நாம் சிந்திக்கலாம். இக்கட்டத்தில் சில நாடுகளில் தலைதூக்கிய போராட்டங்கள் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

சைப்பிரஸில் துருக்கியர், பிலிப்பைன்ஸில் முஸ்லிம்கள், நைஜீரியாவில் ஈபோஸ், பாகிஸ்தானில் வங்காளிகள் இவர்களெல்லோரும் இந்நாடுகளில் ஆளப்படும் இனங்களாக இருந்தவர்கள், தங்கள் உரிமையைப் போராடித்தான் பெற்ருர்கள். எந்தவொரு நாட்டுடனும் எமது நாடு நூறு வீதமும் ஒத்திருக்க வேண்டும் என்பதல்ல.

நைஜீரியாவில் பயாபரா, நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாக இருந்தபடியால் அந்த நாட்டுக்கு உணவு கொண்டு செல்வதைத் தடுக்க முடிந்தது. பட்டினி காரணமாக அவர்கள் சரணகதி அடைய நேர்ந்தது.

ஆனல் இவ்வாறு பட்டினியால் சரணகதிஅடைய நேரும் ஒரு நிலை எமக்கு ஏற்படமுடியாது. எம்மைச் சூழ கடல் இருக்கிறது. கடலை முற்றுகையிடும் சக்தி இந்த அரசுக்கு இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால்கூட சரணகதி அடையமாட்டோம்.

அனைத்தையும் முற்றுமுழுதாக அறிந்திருக்காவிட்டாலும் இங்கு ஒருபோராட்டம் நடைபெறுகின்றபோது எம்மீது அவர்களின் ஏகோபித்த அனுதாபம் இயற்கையாகவே ஏற்படும்.

### சர்வஜன வாக்கெடுப்பு

**கேள்வி:** நடந்து முடிந்த தேர்தலை, ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே நீங்கள் கணித்திருக்கின்றீர்கள். ஆனல், வடக்கில்மட்டுமே பெரும் வெற்றி கிடைத்திருக்கிறது. கிழக்கு மாகாண மக்களின் அங்கீகாரத்தை நீங்கள் பெறவில்லை என்று கூறப்படுகிறதே.

எம். ஜி. எம்.

**அமிர்:** சர்வசன வாக்கெடுப்பு பகுதி பகுதியாகக் கணிக்கப்பட வேண்டியதில்லை. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பது ஆங்கிலேயர் தமது நிர்வாக வசதிக்காக ஏற்படுத்திய பிரிவுகளே.

நாம் வடக்கு கிழக்கு என்ற அடிப்படையிலல்ல. இவையடங்கிய தமிழ்ப் பிரதேசத்தில் தான் சர்வசன வாக்கெடுப்பை நடத்தினேம்.

மாகாண ரீதியாக பார்ப்பதாக இருந்தால், ஐக்கிய தேசியக்கட்சிக்கு வடக்கில் ஆட்சி செலுத்தும் உரிமை இருக்கமுடியாதே! ஐ. தே க. வடக்கைவிட்டு விடவேண்டுமே!

ஆகவே எமக்கு போதுமான அளவில் 57 வீதம் மக்களின் அனுமதி கிடைத்திருக்கிறது. இந்த மக்கள் தொகையினருள் எமக்கு ஒரு வாக்கைக்கூட அளித்திருக்கமுடியாத சிங்கள மக்களும் அடங்கியேயிருக்கின்

# சரணகதி என்ற பேச்சுக்கு இடமே இல்லை!

"இதுதவிர, எதிர்க்கட்சித் தலைவராக நாம் வந்திருப்பதால், எமது இலட்சியங்களைக் கைவிடவேண்டும் என்றல்ல பொருள். நமக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும். இதில்தான் நாம் கண்ணும் கருத்துமாக இருப்போம் இன்னும் சுருக்கமாகச் சொல்வதென்றல், சம்பிரதாயப்படி நாம் எதிக்கட்சிதான். எதிர்க்கட்சி தலைமைப்பீடமும் எம்பீடம்தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனல் எமது ஒரே எண்ணம். நோக்கம், குறிக்கோள் எல்லாம், எமது சமுதாயத்துக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதுதான்.

### பேச்சுவார்த்தை

**கேள்வி:** எமதுபிரச்னைகளை உரிமைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமாகத்தீர்த்து வைக்கமுடியாது என்று தீர்மானித்துவிட்டீர்களா?

**அமிர்** இதுபற்றிய எங்களது நிலையை நாங்கள் விளக்கமாகக் கூறியிருக்கின்றேம். பேச்சுவார்த்தை, ஒப்பந்தங்களில் எமக்கு நம்பிக்கையில்லை! எமக்கு நம்பிக்கை ஒளியை ஏற்றிவைப்பது பெரும்பான்மை சமூகத்தினரின், அரசின்

**கேள்வி:** 1971-ம் ஆண்டு கிளர்ச்சிக்காலத்தில்பெறப்பட்டதுபோல் இந்தியஅரசின்கடற்படை உதவிகள் இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தால் பெறப்படலாம் தானே?

**அமிர்:** இல்லை! இதில் தமிழ் நாடு அரசு எமக்கு நிச்சயமாக உதவும். இலங்கை அரசுக்கு எவ்வித உதவியையும் அளிக்காதவாறு இந்திய அரசாங்கத்தை தமிழ் நாடு அரசுதடுக்கக்கூடிய சக்தி அதற்கிருக்கிறது அது ஒரு மாநில அரசாக இருந்தாலும் அங்கு வாழ்கின்ற நாலரைக்கோடி மக்களின் அதிருப்தியைத்தேடி சிங்கள அரசாங்கத்துக்கு இந்திய அரசு உதவி அளிக்காது இதில் எனக்கு நிறைந்த நம்பிக்கையுண்டு

இத்தேர்தல் வெற்றிகுறித்து தமிழ்நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளுமே எமக்கு பாராட்டுத் தெரிவித்திருக்கின்றன. எனக்குத் தெரியாது எத்தனையோ எம் எல். ஏக்கள் கூட எனக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்தார்கள்.

நான் அறிந்தேன், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது தமிழ்நாட்டில் எத்தனையோ இடங்களில் வெடி கொளுத்தி மகிழ்ந்தார்களாம். எம்முடைய வெற்றி அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது.

### ஆதரவு கிடைக்கும்

தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே நமது பிரச்னைகள்

ருர்கள் அவர்களையும் உள்ளடக்கியே 57 வீதம் ஆதரவை நாம் பெற்றிருக்கின்றேம்.

51 வீத மக்களின் ஆதரவை மட்டுமே பெற்றுள்ள ஐ தே. க. வுக்கு அரசியல் சாசனத்தை திருத்த மக்கள் அனுமதிஅளித்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படும்போது, எமது தனிநாடு கோரிக்கைக்கு 57 வீதம் ஏன் அனுமதியாகாது? நாம் மக்களின் அனுமதியை மிகத் தெளிவாகப் பெற்றிருக்கிறேம்.

### மாவட்டசபைகள்

**கேள்வி:** மாவட்ட சபைகளை அமைக்க அரசு முயற்சிப்பதாகத் தெரிகிறது. இது நிறைவேற்றப்பட்டால், நீங்கள் மாவட்ட சபைகளை ஏற்றுக்கொள்வீர்களா?

**அமிர்:** மாவட்டசபைகள் மூலம் எமது பிரச்னைகளைத் தீர்க்கமுடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை! தவிர, இந்த மாவட்ட சபைகள் எவ்விதமாக அமையப்போகிறது என்பதை நாம் முதலில் ஆராய வேண்டும். மாவட்டசபைகள் என்றல் என்ன? அவற்றின் பொறுப்பு, கடமைகள் என்ன? இச்சபைகள் மூலமாக அந்தந்தப் பகுதிகள் எவ்விதமாக 'ஆள்'ப்படப்போகின்றன? என்ற விபரங்களையெல்லாம் அரசு சமர்ப்பிக்கும் அல்லவா? இதன் பின்னர் நாம் இதுபற்றி ஆராய்வோம். நடவடிக்கைக்

(6ம் பக்கம் பார்க்க)

### பாலஸ்தீன விடுதலை இயக்கம் இன்றேல்

# ஜெனீவா மகாநாட்டை ரஷ்யா பகிஷ்கரிக்கும்

## அரபாத்துக்கு சோவியத் யூனியன் உறுதி

மாஸ்கோ, ஆக. 11

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான ஜெனிவா மகாநாட்டில் பாலஸ்தீன பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படாத பட்சத்தில் அம்மாநாட்டை சோவியத் யூனியன் பகிஷ்கரிக்கும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜஷப் யாஸிர் அரபாத்திற்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் சோவியத் யூனியன் மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளது.

**வான்ஸ் கருத்து**

இதே வேளையில் மத்திய கிழக்கில் சமாதான சுற்றுப் பயணம் மேற்கொண்டுவரும் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு சைரஸ்வான்ஸ், அரபுக்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே இருந்துவரும் கருத்து வேறுபாடுகளைக் குறைப்பதில் தம்மால் வெற்றி காணமுடியவில்லை என்று கூறியுள்ளார்.

மத்தியகிழக்கு விவகாரம் தொடர்பான முக்கிய 'பிரச்னைகளில் இஸ்ரேலியர்களுக்கும் அரபுக்களுக்கும் இடையே விரிவான இடைவெளி இருந்ததை தமது சுற்றுப் பயணத்தின்போது தம்மால் உணர்ந்துகொள்ள முடிந்தது என்றும் திரு. வான்ஸ் தெரிவித்தார்.

**மோஷிதயான் கருத்து**

மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக சமரசம் காணும் வாய்ப்பு உண்டு என்று இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் ஜெனரல் மோஷிதயான் தெரிவித்துள்ளார். (இ)

## நீண்டகால வெள்ளத்தடுப்பு அவசியம்பற்றி மொரார்ஜி

### நிவாரண வேலைகளில் இராணுவம்

புதுடில்லி, ஆக. 11

இந்தியாவில் இடையிடையே ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் உண்டாகும் பெருஞ்சேதத்தைக் கட்டுப்படுத்த நீண்டகால வெள்ளத்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகஅவசியம் என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தெரிவித்துள்ளார்.

வடஇந்தியாவில் ஏற்பட்டுள்ள பயங்கர வெள்ளப் பெருக்கு பற்றி ஆராய்வதற்காக திரு. தேசாய் அவசர மகாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தார்.

ராஜஸ்தான், ஹரியானா, உத்தரப் பிரதேசம் உட்பட பல மாநில முதல் மந்திரிகளும் அதிகாரிகளும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

இதேவேளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் வெள்ளநிவாரண வேலைகளை ராணுவம் பொறுப்பேற்றுள்ளது.

**ராஜஸ்தானில் 48 பேர் பலி**

ராஜஸ்தானில் இதுவரை வெள்ளத்திற்கு 48 பேர் பலியாகியுள்ளனர் என்றும் 30ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது.

உத்தர பிரதேசத்தில் இதுவரை 15 பேர் வெள்ளத்திற்குப் பலியானர்கள்.

**டில்லியில் அபாயநிலை**

டில்லியில் வெள்ள அபாயம் இன்றும் இருந்துவருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## அ.தி.மு.க.வினர் போட்டி

சென்னை, ஆக 11

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபையின் துணை சபாநாயகர் பதவிக்காக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மூவர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (இ)

## மொரார்ஜி ஜே.பியை சந்திக்கிறார்

புதுடில்லி, ஆகஸ்ட்11

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இந்திய சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணை இம்மாதம் 24ந் திகதி சந்திப்பார்.

திரு.மொரார்ஜி பிரதமராகப் பதவி ஏற்றபின்னர் முதல் தடவையாக ஜெயப்பிரகாஷரைச்சந்திக்கிறார். (இ)

## 'சுகாதாரம் இன்றேல் லைசென்ஸ் ரத்தாகும்''

### யாழ். நகர் ஹோட்டல்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் உள்ள தேநீர்க் கடைகள் ஹோட்டல்கள் ஆகியன சுகாதார வசதிகளுடன் இயங்காவிடில் அவற்றின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச்செய்யப்படும்.

இதற்கானஉத்தரவை யாழ். மாநகர விசேட ஆணையாளர் திரு. கே சிவஞானம், சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கியுள்ளார்.

மாநகர மன்ற எல்லைக்குள் உள்ள தேநீர்க் கடைகள் சாப்பாட்டுக் கடைகள் மிகவும் கேவலமானநிலையில் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையில் இக்கடைகள் இயங்கி வருவதால் இங்குவரும் மக்கள் ஆசைக்கு தேநீர் காணும் அருந்தமுடியாத நிலையிலுள்ளனர் என்றும் திரு சிவஞானம் தெரிவித்தார்.

சுகாதார பரிசோதகர்கள், கடைச் சொந்தக்காரர்களுக்கு உடன் ஆலோசனை வழங்கி கடைகளை சுத்தமாக வைத்திருக்கச் செய்யவேண்டும். அப்படி செய்யாவிடில் அனுமதிப் பத்திரங்களை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திரு. சிவஞானம தமது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-இ)


## பணம் ஏது என்று கூறமுடியவில்லை:

### ஆசாமி கைது

கொழும்பு, வியா

தமது கைவசம் வைத்திருந்த 1290 ரூபா பணம் வந்த விதம்பற்றித் தெளிவான விளக்கத்தைப் பொலிசாருக்கு அளிக்கமுடியாத நபர் ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பெருமாள் என்று தன் பெயரைக் கூறிக்கொள்ளும் 24 வயதுடைய இந் நபர் எங்கோ ஒரு வீட்டில் வேலை செய்து அங்கிருந்து இப் பணத்தைத் திருடிக்கொண்டு வந்திருக்கலாம் என பொலிசார் கருதுகின்றனர். (உ)



வேலர்; உன்னுடைய மகளை நகையால சோடிச்சு கலியாணம் பண்ணிக் குடுத்தியே ... ... இப்ப காதுகழுத்திலை ஒண்டையும் காணன்.

மயிலர்: ஊரிலை திருடர் கூட்டத்திற்குப் பயந்து தவறணையிலை கொண்டுபோய் அடைவு வைச்சிட்டார் ... மருமகன்பிள்ளை.

சுந்தர்

## நாளை வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம், யாழ். எம். பி. திரு வி. யோகேஸ்வரன் உட்படத் தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் அனைவருக்கும் வரவேற்புவிழா ஒன்று நாளை மாலை கன்னாதிட்டி விளையாட்டு மைதான முன்றலில் நடைபெறவிருக்கிறது.

## விசேஷ ஆணையாளர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி நகரசபையின் புதிய ஆணையாளராக திரு. கே. நவரத்தினராஜா உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்பு சாவகச்சேரி நகரசபையின் பிரதம லிகிதராகக் கடமையாற்றியவர் இவருக்கு பொது வரவேற்பொன்றளிக்க ஒழுங்கு செய்யப்படுகிறது. (கெ-அ)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், வியா

எழுதுமட்டுவாள் நடேசன் தமிழ் மன்றத்தின் பதினோராவது ஆண்டு விழாவையொட்டி அடுத்த மாதம் அகில இலங்கை ரீதியிலான மாட்டு வண்டி சவாரியொன்றை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. வெற்றி பெறும் வீரர்களுக்கு தங்கப் பதக்கம், வெள்ளி விருதுகளும் வழங்கப்படும். போட்டி மூன்றுபிரிவுகளாக நடைபெறும். (கெ-அ)

## சந்தேகநபர்கள் பிணையில்

நாவலப்பிட்டி, வியா

தோட்ட மனேஜர் ஒருவரின் வீட்டுக்கும், உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நாவலப்பிட்டியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம். சிவரத்தினம் பன்னிரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தார்.

கலபொட தோட்ட மனேஜரின் வீட்டுக்கும் உடைமைகளுக்குமே சேதம் விளைவிக்கப்பட்டன

இன்ஸ்பெக்டர் திரு. சிவரத்தினம் இச்சந்தேக நபர்களை நாவலப்பிட்டி நீதிபதி திரு. சிறில் பி. ஹூனுகுப்பற முன்னிலையில் ஆஜர் செய்தபோது முதல்ஆறு சந்தேக நபர்களைத் தலா 1500 ரூபா பிணையிலும் ஏனைய சந்தேக நபர்கள் அறுவரையும் தலா 1000 ரூபா பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதி வழங்கி மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

ஐம்பதினாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் அச்சுவேலி மகாவித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். மாணிக்கவாசகர் நாட்டிவைத்தார்

கல்லூரி அதிபர் திரு. எம். பத்மநாதன் தலைமையில் இந்த அடிக்கல்நாட்டு விழா நடைபெற்றது.

கோப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு. வி. தங்கராஜா, கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை உட்பட மற்றும் பலர் இவ்விழாவில் உரையாற்றினர். (உ)

## ஓடும் ரயிலிலிருந்து தவறிவிழுந்த குழந்தை!

மட்டுவில், வியாழன்

அதிவேகமாக ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து கீழே விழுந்த இரண்டு வயதுக் குழந்தை தெய்வாதீனமாக உயிர்தப்பிய சம்பவம் ஒன்று மீசாலையில் நடைபெற்றது

யாழ் — கொழும்பு மெயில் வண்டி சங்கத்தானைக்கும் மீசாலைக்குமிடையே சென்றுகொண்டிருந்தபோதே இக்குழந்தை ரயிலிலிருந்து தவறி விழுந்ததாம்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தேவி என்ற இக் குழந்தை தமது பெற்றோருடன் இந்த ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருக்கையிலேயே இச்சம்பவம் நடந்ததாம்.

கீழே விழுந்து இரத்த வெள்ளத்தில் கிடந்த இக் குழந்தையை ரயில்பாதை வழியே சென்றுகொண்டிருந்த இருவாலிபர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர், சிறிதுநேரத்தில் பெற்றோரும் அங்கு வந்து சேர்ந்தனர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தை இப்போது ஆபத்துக்கட்டத்தைத் தாண்டிவிட்டதாக டாக்டர்கள் கூறினர்கள், (இ)

## சிங்களச் சட்டத்தால் வேலைஇழந்தோர் நிவாரணம் கோருகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிங்களச் சட்டத்தால் வேலையிழந்தோர் கழகச் செயலாளர் திரு எம். மகாலிங்கம், தங்களுக்கு நிவாரணமளிக்குமாறு பொதுநிர்வாகப் பிரதிஅமைச்சர் திரு. பேர்சிசமரவீராவிடம் கோரியுள்ளார்.

பிரதிஅமைச்சருக்கு அவர் அனுப்பியுள்ள மகஜரில், உத்தியோக மொழிச்சட்டத்தினால் 63ம்ஆண்டில்வேலையிழந்துள்ளதாகவும், நிவாரணம்பெற பலமுறை முயற்சித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் 2200 சிங்கள ஊழியர்களும், 1800 தமிழ் ஊழியர்களும் பதவியிழந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டி சகலருக்கும் நஷ்டஈடு வழங்குமாறு கோரியுள்ளார். (க-இ)

# றோட்டறிச் சங்கச் சேவைக்கு பிலிம் அதிபர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

''நல்ல டல பணிகளைச் செய்துவரும் யாழ்ப்பாண றோட்டறிச் சங்கத்தின் பணி சிறப்பான முறையில் தொடர்ந்து மக்களுக்கு நலம் பயக்க வேண்டும்'' என எஸ்.டி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. தியாகராஜா யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் றோட்டறிக்காணிவலைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 'கலைஞர் டி. எம். சௌந்தரராஜன் இக் காணிவலில் பங்குபற்றுவார் என்னும் பத்திரிகைச் செய்தி ஒன்றைக் கண்டேன். தமிழ்க் கலைஞர்களை இங்கு வரவழைக்கும் இத்தகைய முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவை'' என்றார்.

இவ்வைபவத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தலைவர் டாக்டர் பிலிப்பும் யாழ். றோட்டறிச் சங்கத்தலைவர் திரு.ஆர் ஜே. குணரத்தினமும் திரு. தியாகராசாவுக்கு மாலைசூட்டி அழைத்துவந்தனர்.

வைபவத்தைத் தொடக்கி வைத்து தலைமையுரை நிகழ்த்திய றோட்டறித்தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் தமது உரையில் 'பலதரமான திரைப்படங்களை திரையிட்டு மக்களுடையமனதில் இடம்பிடித்த திரு. தியாகராசா மக்களுடைய மனதுக்கு மகிழ்ச்சியை மட்டும் ஊட்டுவதுடன் நின்றுவிடாது அவர்களுடைய நல்வாழ்வுக்காகவும் பல சேவைகளைச் செய்துள்ளார். அவர் அளித்த பணஉதவிகள் றோட்டறிச் சங்கம் பலசமூகசேவைகளைச் செய்வதற்கு உறுதுணையாக அமைந்தது. இவ்வாறுகச் சைவமும் தமிழும் தழைக்கப்பாடுபடும் சமூகசேவையாளர் திரு. தியாகராசாவை றோட்டறிச் சங்கத்தின் சார்பாகவும் சம்பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் சார்பாகவும் வரவேற்பதில் பெருமையடைகின்றேன்'' என்றார். [இ அ]

---

வேலணை

## பெற்றோல் நிலையம் மூடப்பட்டது

வண்ணார்பண்ணை, வியா

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிலையம் திங்கட்கிழமை நடந்த திடீர் பரிசோதனை ஒன்றைத் தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.

இந்த எரிபொருள் நிலையத்தை பெற்றோலியம் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் பரிசோதனை செய்தபோது, பெற்றோலில் மண்ணெண்ணை கலந்திருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிலையம் சீல்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

---

ஆசிரியர் — பெற்றோர் இடம்பெறும்

# மாவட்ட கல்வி ஆலோசனைச் சபைகள்

கொழும்பு, வியா

கல்வி முன்னேற்ற நடவடிக்கைகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் உதவியையும் பெறுவதென கல்வியமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தீர்மானித்துள்ளார்.

ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகளை அமைச்சு நிறுத்திவைத்துள்ளது. கல்வி அலுவலகங்களில் ஆசிரியர் பிரதிநிதிகள் பொது ஜனதொடர்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படுவர்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள் இடம்பெறும் மாவட்ட ரீதியிலான ஆலோசனைக்குழுக்களும் நியமிக்கப்படவிருக்கின்றன.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு. 12615

(காலஞ்சென்றவர்) கந்தையா கைம்பெண் செல்லம்மா அராலி வடக்கு வட்டுக்கோட்டை.

வழக்காளி

கந்தையா கதிரவேலு அராலி வடக்கு வட்டுக்கோட்டை.

எதிராக

கதிரவேலு கும்ரையா மயிலப்புலம் திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 12615-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக்காணி 1977-ம் வருடம் புரட்டாதி மாதம் 27-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 1488/-ம் 27-6-1971 தொடக்கம் 19-1-1972 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5/-வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 340-85 சதம். இதில் 250/- கழித்து

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலியிலுறை 'மாதனைப் புலம் நிலப்பரப்பு இலாச்சம் பதினெட்டும் பதின்மூன்றுகுழியும் வீடும் பயிர்வகைகளும் கிணற்றில் பங்கும். இதற்கு எல்லை கிழக்கு முருகேசு சிவக்கொழுந்துவும் பங்காளருக்குரிய ஆதனம். வடக்கு கார்த்திகேசு தில்லையம்பலத்தினதும் வயித்தயா இளையப்பாவினதும் ஆதனம். மேற்கு ஆறுமுகம் இராமநாதனுறுதனம், தெற்கு ஒழுங்கையும் ஆறுமுகம் இராமநாதனுக்குரிய கைஒழுங்கை. இதனடங்கலும், இதைச்சேர்ந்தவைகளும்.

இ. கனகரெத்தினம்

கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 6822


---

# ''வடக்கு-கிழக்கு பொருளாதாரத்தை கூட்டுறவே பாதுகாக்கும்''

## வி. பொன்னம்பலம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தைக் காப்பாற்றக்கூடிய வடிவம் கூட்டுறவு இயக்கம்தான் என்று கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'பிரதேசக்கூட்டுறவாளர் கழக' அங்குரார்ப்பணக் கூட்டத்தில் அக்கழகத்தின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வி.பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'வடபகுதிமக்களில் பெரும் பகுதியினர் விவசாயிகள். வடபகுதியின் பொருளாதாரத்தை மட்டுமன்றி, கிழக்கிலங்கையின் பொருளாதாரத்தையும் காப்பாற்றக்கூடிய ஒரு வடிவம் கூட்டுறவு இயக்கம்தான்.

'வடக்கு கிழக்கு மக்கள் மத்தியில் இப்போது பெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு வாழ்வளிக்கும் நிறுவனமும் கூட்டுறவு இயக்கமே.

### கூட்டுறவுக்குச் சவால்

தனியார்துறையினர் வளருவதற்கு நாம் உதவியாக இருக்ககூடாது. 500 கூப்பன்கள் மட்டுமே ஒரு கடைக்குரியதென்றும், மற்றக் கூப்பன்கள் தனியார் வியாபாரிகளுக்குக் கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. இது கூட்டுறவுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது. ஆதலால் தமிழ்ப் பிரதேசத்தை உள்ளடக்கிய ஒரு கழகத்தை நாம் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு பிரதேச கூட்டுறவாளர் கழகம் எனப் பெயரிடவேண்டும்.

### வட மாகாணத்தில்தான் கூட்டுறவு ஆரம்பம்

திரு. என். சின்னத்தம்பி பேசும்போது: கூட்டுறவு ஸ்தாபனத்தின் பிரதான நோக்கம் வழிகாட்டியாகும் என்றும் முதன்முதல் வடமாகாணத்தில்தான் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் இதனை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்றும் கூறினார்.

முன்னாள் சிரேஷ்ட உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை கூறியதாவது:



### கூட்டுறவு அழிவுக்குக் காரணம் இலங்கரத்தின

முன்னாள் அமைச்சர் இலங்கரத்தின கூட்டுறவு இயக்கத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தார். நாங்கள் அவருக்குக்கீழ் பணியாற்றியபோது கைகட்டி, வாய்பொத்தி அவர் கூறியதையே செய்துவந்தோம்.

67-ம் ஆண்டு முதல் 70-ம் ஆண்டு வரை கூட்டுறவு இயக்கம் சுமாராக நடந்து வந்தது. அதன்பின்தான் தில்லுமுல்லுகள் ஆரம்பமாயிற்று.

வடக்கைப் பொறுத்தவரை இருவர் கூட்டுறவு அமைச்சர்களாக இருந்தனர். கூட்டுறவு விஷயத்தில் முன்னாள் கூட்டுறவு அமைச்சர் மட்டுமல்ல முன்னாள் தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரும் அனுமதி வழங்கவேண்டும்.

### பைல்களுடன் தபால் அமைச்சுக்குச் செல்லவேண்டும்

எனது கந்தோரிலிருந்து நான் தபால் அமைச்சுக்கு பைல்களுடன்சென்று எல்லாம் சரிதானா? என்று கேட்டு அவர் சம்மதித்தபின்தான் எல்லாம் செய்யவேண்டியிருந்தது. வடபகுதிக் கூட்டுறவு நெறியாளர் நியமனமும் அவரின் அனுமதிக்குப் பின்னரே அனுப்பக்கூடியதாயிருந்தது. சில காலம் தமிழ்ப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில் முன்னாள் தபால் அமைச்சர் குமாரசூரியரே கூட்டுறவு அமைச்சராக இலங்கி வந்தார்.

### சூரியர் சொல்வதே சட்டம்

அவர் சொல்வதே சட்டமாக இருந்தது. அங்கு நேர்மைக்கு இடமில்லை. இங்குள்ள கூட்டுறவுச்சங்கங்களில் பெரும் ஊழல்கள், மோசடிகள் நடந்து அவற்றை நாம் மேலதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினோம். அதனால் பலனில்லை, குற்றம் செய்தவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குற்றங்கள் மறைக்கப்பட்டன. தொடர்ந்து குற்றவாளிகளே பதவியிலிருக்க வழிசெய்யப்பட்டது. இப்படியான செயலாலேயே வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் அழிந்துபோய்விட்டது; பொருளாதாரம் சீர்கெட்டது; மக்கள்நிலை குன்றியது. இந்நிலை மாறவேண்டும்.

### வடக்கையும் கிழக்கையும் ...

எங்கள் தமிழ்ப் பிரதேசத்தில் திரட்டப்பட்ட நிதி எங்கள்நாட்டில் இருக்க வழிசெய்ய வேண்டும். மகஜர் அனுப்பினால்மட்டும் போதாது. கூட்டுறவு மந்திரியை நேரில் சந்திக்கவேண்டும். வடக்கையும் கிழக்கையும் சேர்த்து இக்கழகத்தை அமைக்கவேண்டும்.

திரு. சூசைதாசன் பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் 27-ம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில்தான் இலவசமாக ஒவ்வொரு சங்கத்திற்கும் சென்று மேற்பார்வை செய்தேன்.

'தமிழர் விடுதலைக்கூட்டணி சிறந்த பிரதேசத்தைப் பெற முயல்வதுபோல், கூட்டுறவாளராகிய நாம் இழந்த கூட்டுறவுத்தன்மையை மீட்டு எடுப்பது தான் முக்கியம். தமிழ்ப் பிரதேசத்திற்குத் தனியான கூட்டுறவுச்சபை அமைக்கவேண்டும்'.

முன்னாள் உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். கந்தசாமி, முன்னாள் கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. ரி. முருகேசு ஆகியோரும் ஆலோசனை வழங்கினர். (க-இ)

---

## யாழ். மணிக்கூட்டு கோபுரம்

யாழ். நகரின் மத்தியில் நிமிர்ந்து நிற்கும் மணிக்கூட்டு கோபுரம் நேரம் (12-15 பன்னிரண்டு மணி பதினைந்து நிமிடங்கள் என பல மாதங்களாக காட்டிக்கொண்டிருக்கின்றது.

சில தினங்களுக்குமுன் நான் மாலை 5 மணியளவில் மணிக்கூட்டுப் பக்கத்தில் எனது நண்பனுடன் உரையாடிக்கொண்டு நின்றேன். இரண்டு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் நடந்து வந்தார்கள். ஒருவர் மணிக்கூட்டு கோபுரத்தின் நேரத்தைப் பார்த்தார். 12 மணி 15 நிமிடம் காட்டிக்கொண்டிருந்தது. அப்பொழுது அவருடைய நேரம் 5 மணியாக இருந்தது. தங்கள் நேரம் பிழை என நினைத்த அவர்கள் மணிக்கூட்டு கோபுரத்தின் நேரம்தான் சரி என இருவரும் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். என்னிடம் இப்பொழுதுநேரம்என்னஎன்று கேட்டார்கள். நான் 5 மணி என்று கூறினேன். மணிக்கூட்டு கோபுரத்தின் நேரம் சரி என்று நினைத்த அவர்கள் வெகு நேரமாக மணிக்கூட்டு கோபுரத்தையே பார்த்துக்கொண்டு இருந்தார்கள். என்னுடன் பல இளைஞர்கள் இவர்களது வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வெளிநாட்டுப் பிரயாணிகளின் கேலிக்கைக்கு எமது யாழ். நகரின் மணிக்கூட்டு கோபுரம் இருந்துவருவது குறித்து நான் மிக மனவருத்தம் அடைகிறேன்.

இதனைத் திருத்தி அமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கலாகாதா?

சு. ராஜநாதன்,
சட்ட மாணவன்,
யாழ்ப்பாணம்.

---

## இன்று நயினையில்...

யாழ்ப்பாணம், வெள்ளி

வரலாற்றுப் புகழ் கொண்ட நயினை ஸ்ரீநாகபூசணிஅம்மன் அஷ்டோத்திர சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

கிரியைகளை சிவாகம ஞான சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் 18குருக்கள்மார் நடாத்தி வைப்பார்கள். (கெ-உ)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி களுக்கு இன்று மாலை நயினாதீவு சந்தை மைதானத்தில் பொது வரவேற்பளிக்கப்படும்.

இன்று நயினாதீவுநாகபூசணி ஆலயத்தில் இதனையொட்டி விசேட சமய நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (கெ-உ)

---


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் றேட்டுத் தெற்கு,
கொழும்பு - 10

போன்: 24261-5

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

பேர்சுடன்கூடியகார்ட்றைவிங் லைசன்ஸ் புத்தகம், கார் இன்சூரன்ஸ், வரிசெலுத்திய றிசீற் முதலியன காரிலிருந்து தவறிவிட்டன லைசன்ஸில் பெயர்விலாசம் அழிந்துள்ளது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீதேவி மரவியாபார நிலையம், 28, ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 6827

## சுழிபுரம் கிராமசபை

### கேள்வி அறிவித்தல்

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குள் 01-09-1977 தொடக்கம் 31-12-1977 வரை;

அ. ஆட்டிறைச்சி விற்பனை செய்யும்,
ஆ. கருவாடு விற்பனை செய்யும்

உரிமைக்கான தனித்தனிக் கேள்வி விண்ணப்பங்கள் 17-08-1977 காலை 10 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சுழிபுரம் கிராமசபை, சத்தியக்காட்டுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைகள்;

இல: 1. ஆட்டிறைச்சிக் கடை,
இல: 2. கருவாட்டுக் கடை

வாடகைக்கு விடப்படும். இதற்கான கேள்விகளும் என்னால் 17-8-1977ம் திகதி காலை 10 மணிவரை கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் பெற விரும்புபவர்கள் 16-08-1977 நண்பகல் 12மணி வரை எனது அலுவலகத்தில் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 5 00ம், கேள்விப்பத்திரப் பிணைப்பணம் ரூபா 25-00ம் செலுத்திப் பெறப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் கேள்விகளைக் கேட்க வேண்டும். கேள்விகள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்படலாம்.

மேற்கொண்டு விபரங்கள் தேவைப்படின் சுழிபுரம் கிராம சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
க. ஞானபாஸ்கரன்
விசேட ஆணையாளர்,
கிராமசபை, சுழிபுரம்.
10-8-1977. 6826

## காணவில்லை

மூன்று பித்தளைச் சில்லுகள் நடுவில் ஓட்டை உள்ளது நெருப்புப்பெட்டிக்குள் வைத்தபடி சாவகச்சேரி பஸ்நிலையத்தில் 10-8-77-ந் திகதி காணாமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் கே. இளையதம்பி, 43, நாயன்மார்வீதி, நல்லூர் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6823

## விற்பனைக்கு

பெரிய அளவிலான காட்போட் பெட்டிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கணபதி ஸ்ரோர்ஸ், 18, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 225. 6807

## தேவை

வேப்பம் விதைகள், இலுப்பை விதைகள், ஆமணக்கம் விதைகள் தொகையாகத் தேவை விலை விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் அன் கம்பனி, 53, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 541. 6794

தேவன்ஸ் சீயாக்காய்ப் பவுடர் மற்றும் தயாரிப்புகள் தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகளும், சைக்கிளில் வியாபாரம் செய்யக்கூடிய ஆண்களும் தேவை. தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 159, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6813

## விற்பனைக்கு

உன்னத நிலையில் உள்ள ஒரே பாவிப்பில் இருக்கும் பொன்ரியாக் கார் (EY 3857) உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

சி. செ. மாரிமுத்து
கொம்மிஷனர்

விதானை வளவு,
சித்தன்கேணி. 6772

## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப் பட்டுள்ளது)

### பருத்தித்துறை பகிரங்க ஏலவிற்பனை

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் கழிவுமா, வெற்றுச் சவற்காரப் பெட்டி ஆகியன எதிர்வரும் 20-08-77-ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்குச் சங்கத்தின்மொத்தக்களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
6825 09-08-77

## அறிவித்தல்

மானிப்பாய்க் கிராம சபை விசேடஆணையாளராகிய நான் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவிஆணையாளரின் அங்கிகாரத்துடன் சண்டிலிப்பாய் 15ம் வட்டாரத்திலுள்ள ஐயனார் கோவில் உபஒழுங்கையை மானிப்பாய்க் கிராமசபையின் கீழ் பராமரிப்புக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளேன்.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு சீ. இரத்தினசிங்கத்தினால் தயாரிக்கப்பட்ட நில அளவு வரைபடம் இலக்கங்கள் 546, 547 இன்படி மேற்படி உபஒழுங்கை 2 பரப்பும். 08 குளியும் விஸ்தீரணம் உடையது. இந்நில அளவுப்படத்தை பொதுமக்கள் காரியாலய நேரத்தில் மானிப்பாய் கிராம சபை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

இவ்ஒழுங்கையை சபைக்கு பாரம் எடுப்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருப்பின் இவ் விளம்பரம் பிரசித்தப்படுத்தும் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் தமது ஆட்சேபனையை எனக்கு எழுத்து மூலமாக அறிவிக்கவேண்டும். இக் குறிபபிட்ட கால எல்லைக்குள் தெரிவிக்கப்படாதஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பம்
சி. கே. இலங்கராஜா
விசேட ஆணையாளர்,
மானிப்பாய்க் கிராம சபை,
ஆனைக்கோட்டை.
6828


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர் -சரோஜாதேவி
பணத்தோட்டம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
DALEKS INVASION EARTH

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
Five Crazy Boys

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
சிவாஜி — பத்மினி — நாகையா — தங்கவேலு
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நான் வணங்கும் தெய்வம்
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்—சுஜாதா
நீ ஒரு மகாராணி

REGAL Daily: at 4-45, 7-00 & 9-30 p.m.
(JAFFNA)
Adventure & Excitement for the Whole Family!
CHARLTON HESTON
in
CALL OF THE WILD
(Color)


கடைசி தினம்
ராஜா
(யாழ்நகர்)
95-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி: 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-லதா - நாகேஷ் அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு - வெள்ளைப் புதிய பிரதி)
19-ந் திகதி முதல்
சிவகுமார் சுஜாதா
அன்னக்கிளி

கடைசி வாரம்
ராணி
(யாழ்ப்பாணம்)
100-வது நாள்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
நாளை நமதே
15ம் திகதி முதல்
சிவாஜி-கே. ஆர். விஜயா
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)

[illegible] (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
டோனி கேட்டிஸ்
ரோஜர் மூர்
நடித்த
புதிர்...
மர்மம்...
திகில்...
நகைச்சுவை...
அதிர்ச்சி...
பரபரப்பு...
நிறைந்த
'லண்டன கொன்ஸ்பிறசி'
(இலண்டன் சதித்திட்டம்)



வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
இப்பொழுது நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்





சிவாஜி, மஞ்சுளா,
கமலஹாசன், தேவிகா,
ஜெயசித்ரா,
எஸ். வி. சுப்பையா
நடித்த
சத்யம்
டைரக்ஷன்: S. A. கண்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
(திரைக்கதை, வசனம்: வியட்நாம்வீடு சுந்தரம்)

ஈழநாடு
The EELANADU

# மூன்று கோடி ரூபாவுக்கு பாலுணவு இறக்குமதி

## தட்டுப்பாட்டை போக்க ஏற்பாடு

கொழும்பு, வியா. பாலுணவுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு 3 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகவலை விவசாயக் காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் பாலுணவுக்கு ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நீக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் கூறிய அமைச்சர், எதிர்காலத்தில் நாட்டில் பாலுணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம் மேலும் பாலுணவு இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (இ)

# வடபகுதியில் வர்த்தமானி கிடைப்பதில் சுணக்கம்

## இளைஞர்கள் கவலை

அரியாலை, வியாழன்

அரச வர்த்தமானிப் பத்திரிகை உரியகாலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வராததால் யாழ்ப்பாணப் பகுதியினர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் வேலைவாய்ப்புக்கள் பற்றிய விபரங்களும் விண்ணப்பப்படிவம் மற்றும் விண்ணப்ப முடிவு திகதிகள் இவ் வர்த்தமானியில் வெளிவந்த போதிலும் உரிய காலத்தில் வர்த்தமானி யாழ்ப்பாணம் வராததால் யாழ்ப்பாணத்தவர் அவ் வேலைவாய்ப்புக்களை இழக்க நேரிடுகிறது என்று வடபகுதி இளைஞர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில வேலைவாய்ப்பு விபரங்களை உள்ளடக்கிய 15-7-77 திகதிய வர்த்தமானி இன்று வரை யாழ்ப்பாணம் வரவில்லை. இதனால் சில பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது போனதைத் தொடர்ந்து குறித்த வேலைகளுக்கான விண்ணப்பத் திகதியைப்பின் போடும்படி வடபகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் கோரியுள்ளனர்.

இப்பத்திரிகையில் இலங்கை விமானப்படை நூல்நிலையக் காப்பாளர் தரம் ii, அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம் தொலைத்தொடர்பு சோதனை காரர் பதவிகள் வகுப்பு (iii), ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவற்றிற்கு விண்ணப்பம் செய்யும் கடைசித் திகதி முறையே 15-8-77, 4-8-77 ஆகும்

வடபகுதி மாணவர்கள் உரியகாலத்தில் வர்த்தமானிப் பத்திரிகை வந்து சேராததால் இவைகளுக்கு மனுப்பண்ண முடியாமல் போய் விட்டதைத் தொடர்ந்து விண்ணப்பங்கள் அனுப்பும் திகதியைப் பின் போடும் படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ரயிலில் காலமான பிரயாணி

ஆனைக்கோட்டை, வெள்ளி

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த கடுகதி ரயிலில் பிரயாணம் செய்த பிரயாணி ஒருவர் திடீரென மரணமானார்.

இச்சோகச் சம்பவம் தம்புத்தேகம ரயில் நிலையத்தை நோக்கி ரயில்வந்து கொண்டிருந்தபோது நிகழ்ந்தது.

காலஞ் சென்ற பிரயாணி, சக பிரயாணிகளுடன் ரயிலில் (அ)பேசிக்கொண்டிருந்தபோது திடீரென வலிப்பு ஏற்பட்டதென்றும், இத்திடீர் மாற்றத்தைக் கண்ட சக பிரயாணிகள் உடனடியாக உதவ முன்வந்ததும் கடைசி நேரத்தில் முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை என்றும் பிரயாணி அந்த இடத்திலேயே காலமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் சடலம், அனுராதபுரம் ரயில் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. காலஞ்சென்றவரின் 'ஷேர்ட்' பாக்கெட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு கடித உறையில், மகேஸ்வரன் என்றும் தேசிய கடதாசி கூட்டுத்தாபனம் என்றும் முகவரி ஒன்று காணப்பட்டது (கு)

# தமிழுக்கும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"சகல அரசாங்க, அரசு சார்ந்த நிறுவனங்களின் படிவங்களிலும், தஸ்தாவேஜுகளிலும் தமிழுக்கும் இடமளித்தல்.

"தமிழ் மக்களின் நலன் காக்க, தமிழ் இறப்பு-பிறப்பு பதிவாளர்களையும் நியமித்தல்.

மேற்கண்ட விஷயங்களை தனது கொள்கைப் பிரகடனத்தில் அரசாங்கம் சேர்க்கத் தவறிவிட்டது என்று தனது திருத்தப் பிரேரணையில் சுட்டிக்காட்டும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்-

பொதுத் தேர்தலுக்கு முன்னர் தோட்டங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்கள்பற்றி எதுவுமே குறிப்பிடப்படாததும், டெல்டா தோட்ட வன்முறைகள், டெவன்தோட்டத்தில் இலட்சுமணன் என்ற இளைஞன் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டதுபற்றியும் இது சம்பந்தமாக கமிஷன் நியமிப்பது குறித்தும் ஜனாதிபதி உரையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லையென்றும் இ. தொ. காங்கிரஸ் தனது திருத்தப் பிரேரணையில் தெரிவித்துள்ளது.

# "பரஸ்பர அன்பு பிரச்னைகளைத் தீர்க்கும்"

— வி. என். நவரத்தினம்

மட்டுவில், வியாழன்

"மோட்சமும், நரகமும் மண்ணிலேயா, விண்ணிலேயா என்ற கேள்விக்கு இடமில்லாது மண்ணிலேயே ஒரு மோட்ச நிலையைச் சமைத்துக் கொள்ளும் இந்த வயோதிபர் இல்லஊழியரின் சேவை புனிதமானது. நமது கடமைகளை இலட்சிய அடிப்படையில் செய்வதன் மூலமே எம்மை நாமே புனிதராக்கிகொள்ளுகிறோம்".

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந நவரத்தினம் கூறினார்

கைதடி வயோதிபர் இல்லத்தில் திரு. நவரத்தினம் எம். பி க்கு வரவேற்பளிக்கப்பட்டது. இவ்வரவேற்பு விழாவுக்கு வைத்திய அதிகாரி டாக்டர் சு. கனகரத்தினம் தலைமை தாங்கினர்

செல்வி கமலாவின் தமிழ்த் தேசிய கீதத்துடன் இந்த வரவேற்பு ஆரம்பமானது

திரு நவரத்தினம் எம் பி. தேர்தலின் பின் முதன்முதலாக வயோதிபர் இல்லத்தை உத்தியோகபூர்வமாகச் சுற்றிப் பார்வையிட்டார். இங்குள்ள வயோதிபர்களிடம் குசலம் விசாரித்து, அவர்களின் குறைநிறைகளையும் அறிந்தார்

திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:

"இந்த இல்லத்தின் புனிதமும், தூய்மையும் என்றும் நிலைக்கவேண்டும். இங்கு உங்களுக்குள் தலைதூக்கும் பிரச்னைகளை நீங்களே சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளக்கூடிய பரஸ்பர அன்பு நிலை உருவாக வேண்டும். இதற்கு இங்குள்ள பெரியார், ஊழியர் அனைவரினதும் ஒத்துழைப்புவேண்டும். நான் இரு மாதங்களுக்கு ஒரு தடவை இந்த இல்லத்திற்கு விஜயஞ்செய்து உங்களைச் சந்தித்துச் சகல குறைநிறைகளையும் நிவர்த்திசெய்ய முயற்சிப்பேன்". (உ)

# எம்.ஏ.பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகத்தினால் 1975-ம் ஆண்டு நடாத்தப்பட்ட எம். ஏ. பரீட்சையில் (தமிழ்) சித்தி பெற்றோர் வருமாறு:- க. சொக்கலிங்கம், எஸ். பரமேஸ்வரன், எம். சற்குணம், ஏ. சிவனேசச்செல்வன்.

இப்பரீட்சையில் பொருளாதாரத்துறையில் ஆர். ஜெயரத்தினராஜா சித்தி பெற்றுள்ளார். (கு)

# இன்று நடக்கும் விழா

அரியாலை, வெள்ளி

அரியாலை சாந்தி சனசமூக நிலையப் பாலர் பாடசாலையின் வருடாந்தவிழா நிலைய வெள்ளிவிழா அரங்கில் இன்று மாலை நடைபெறுகிறது.

நிலையத்தலைவர் திரு. த இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் மாநகராட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் கலை-கதம்ப-நாடக நடன நிகழ்ச்சிகளுடன் 'உறவுகள்' 'நினைவுச்சின்னம்' ஆகிய இரு சமூக நாடகங்களும், நடிகமணி வி.வி. வைரமுத்துவும், சொர்ணக்குயில் வி.கே. இரத்தினமும் நடிக்கும் அரிச்சந்திரமயான காண்டமும் விழாவில் இடம்பெறும்.

# எதிர்க்கட்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் முடிவு இறுதியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்றைய நிலையில், எமக்கு உள்ள ஒரே நோக்கு தமிழ்ஈழ அமைப்புத்தான் இதனை அடையும் வழிவகைகளைத் தான் நாம் இப்போது தேடிக் கண்டுபிடிக்கமுயற்சிக்கிறோமே தவிர, சலசலப்புகளை நாம் விரும்பவில்லை. எமது இலட்சியத்துக்கு மாறுபட்ட எந்த வழிகளிலும் இறங்கவும் நாம் தயாரில்லை.

**கேள்வி:** இம்மாதம் பதினெட்டாம் திகதி தேசிய அரசுப்பேரவை மீண்டும் கூடப் போகிறது. அப்போது ஜனாதிபதி உரைக்குநீங்கள் திருத்தப் பிரேரணை சமர்ப்பிக்கப் போகின்றீர்கள். உங்களின் திருத்தப்பிரேரணை நிராகரிக்கப்பட்டால், உங்களின் அடுத்தகட்டம் என்ன?

[இந்தக் கேள்வியை உன்னிப்பாக அவதானித்த 'அமிர்', சற்று நிமிர்ந்து கொண்டுபதிலளிக்க ஆரம்பித்தார்]

# யாருடையது?

யாழ்ப்பாணம் சங்கிலிய?ட் ரைக்கிளினர்சைச் சேர்ந்த செ. சிவநேசனால் நாவற்குழியில் கண்டெடுக்கப்பட்ட பரந்தன் மக்கள் வங்கி அடகுச் சீட்டொன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# "தமிழ் ஈழப் போராட்டத்திற்கு ஜி. ஜி. காங்கிரஸ் ஆதரவளிக்கும்"

## சாவகச்சேரி மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம். வெள்ளி

"தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் ஈழம்பெறும் முயற்சிக்கு தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் முழு ஆதரவையும் வழங்கும். தமிழ் ஈழப்போராட்டத்தில் நமது வாலிபர்கள் பங்குபற்றுவார்கள்."

சாவகச்சேரியில் நடந்த சாவகச்சேரித் தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் மாநாட்டில் பேசிய ஜி. ஜி. காங்கிரஸ் உபதலைவர் திரு. வே. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

வாலிப முன்னணித் தலைவர் திரு. பரமசிவம் தலைமையில் நடந்த இம்மாநாட்டில் திரு. வே. குமாரசாமி மேலும் கூறியதாவது:

வடமாகாணத்தில் இரு வருடகாலத்துக்குள் இடைத் தேர்தல் ஒன்று வரலாம். அப்படி வராவிட்டால் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தங்கள் கொள்கைகளைக் கைவிட்டு விட்டதாகவே கருதப்படும்.

நான் இனி சுறுவாக்காட்டுக்குப் போகமாட்டேன். குழைக்காட்டிலேயே இருந்து சேவை செய்யப்போகிறேன்."

ஜி. ஜி காங்கிரஸ் செயலாளர் திரு. சி முதலியார் கூறியதாவது: கடந்த தேர்தலில் கூட்டணியினர் சர்வஜன வாக்கெடுப்பாகத் தேர்தலைக் கருதினர். வடக்கு கிழக்கிற்கு வெளியில் 20 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் இந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அவர்களின் விருப்பத்தையும் அறிய வேண்டும்.

ஜி. ஜி. காங்கிரஸ் பொருளாளர் திரு. க. இராமநாதன் கூறியதாவது: "அமரர் ஜி. ஜி, பொன்னம்பலத்திற்குக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் சிலை நிறுவ முடிவு செய்துள்ளோம், கொழும்பில் சிலை நிறுவுவதற்காக இடத்தை ஒதுக்குமாறு பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளோம். அமரர் ஜி. ஜி. க்கு மணிமண்டபம் அமைப்பதற்கு தொகுதி தோறும் குழுக்கள் அமைக்க முடிவுசெய்துள்ளோம்."

மீசாலை வாலிப முன்னணி தலைவர் திரு. க. சிற்றம்பலம் மற்றும் திருவாளர்கள் ஆர். ரி. சுப்பிரமணியம், ஆ. தில்லைநாதன், க. பராசன, எஸ். கே குமாரசாமி ஆகியோரும் பேசினர்கள்.

### தீர்மானங்கள்

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:

"தமிழ்பேசும் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண பிரதமர் கூட்டும் சர்வகட்சி மாநாட்டில், தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகளும் கலந்துகொண்டு பிரச்னைகளுக்குச் சுமுகமான தீர்வு கண்டு, அத்தீர்வுகளை அரசியல் சாஸனத்தில் இடம்பெறச் செய்ய பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

"மகாவலி கங்கையை வடபகுதிக்குத் திருப்புவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

"தரப்படுத்தலை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்." (க-அ)

# திறப்பு யாருடையது?

பித்தளைத் திறப்பொன்று யாழ். இந்துக் கல்லூரிக்கருகில் எம். அருளானந்தம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# பளைச் சம்பவம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜவர்கொண்ட மர்மக் கோஷ்டியொன்று கந்தசாமி வீட்டில் கொள்ளையடிக்கையில் அவரை வாளால் வெட்டியதாம். இவரது அபயக்குரல் கேட்டு ஓடோடிவந்த அயலவர் ஒருவருக்கும் வாள் வெட்டு விழுந்ததாம்.

"ஈழநாடு" விற்பனை ஏஜண்ட்

புதுக்குடியிருப்பு பகுதிக்கு எமது பத்திரிகை ஏஜன்டாக
திரு. வ. சி. தம்பையா
ஆனந்தா ஸ்ரோர்ஸ்
பரந்தன் வீதி
புதுக்குடியிருப்பு
என்னும் விலாசதாரர் நியமிக்கப்பட்டுள்ளார். வாசகர்கள் தங்கள் தேவைகளுக்கு அவருடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
ஈழநாடு லிமிட்.
6836
11-8-77

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka.